சுருக்கம்

பள்ளிக் கல்வி - தொடக்கக் கல்வி இயக்ககம் மற்றும் பள்ளிக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிகளில் 1 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ / மாணவியருக்கு அரசின் நான்கு இணை சீருடைகள் வழங்கும் திட்டம் - 2022-2023 ஆம் கல்வியாண்டில் செயல்படுத்திட அனுமதியும், உற்பத்திக்கு தேவையான முன்பணம் அனுமதித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வித்(ஆதேவா) துறை

அரசாணை(நிலை) எண்.13

நாள்: 07.02.2022.
திருவள்ளுவர் ஆண்டு 2053
பிலவ வருடம், தை - 25

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.112, பள்ளிக்கல்வி (ஆதேவா) துறை, நாள் 03.12.2020.
2. அரசாணை (நிலை) எண்.86, பள்ளிக்கல்வி (ஆதேவா) துறை, நாள் 26.04.2021.
3. அரசாணை (நிலை) எண்.121, பள்ளிக்கல்வி (ஆதேவா) துறை, நாள் 04.08.2021.
4. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.006870/ கே1/2021, நாள் 28.12.2021.

*********

ஆணை :-

மேலே முதலாதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2021-2022 ஆம் கல்வியாண்டில் அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவ/ மாணவியர்களுக்கு நான்கு இணை சீருடை வழங்கும் திட்டத்திற்கு அனுமதியும், இத்திட்ட செலவினங்களுக்கு முதல் தவணையாக ரூ82.44 கோடி 2020-2021-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத் தொகையிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து இத்தொகையினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநருக்கு பெற்று வழங்க ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், 2021-2022-ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ / மாணவியர்களுக்கு 4 இணை சீருடைகள் வழங்குவதற்காக முறையே இரண்டாவது தவணையாக ரூ.120.00 கோடியும் மூன்றாவது தவணையாக ரூ.125.00 கோடியும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தொடக்கக்கல்வி இயக்குநர் தனது கடிதத்தில், 2021-2022-ஆம் கல்வியாண்டில் சீருடைகள் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.409.30 கோடியில் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்ககத்திற்கு 80 சதவிகிதம் தொகை ரூ.327.44 கோடியும் சமூக நல இயக்ககத்திற்கு 20 சதவிகிதம் தொகை ரூ.81.86 கோடி என பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

4. மேலும், 2022-2023-ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ/மாணவியர்களுக்கு சீருடை வழங்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட கொள்கை அளவிலான அனுமதியும், உற்பத்திக்கு தேவையான முன்பணமாக வழங்கியும், உற்பத்தி குறியீடு நிர்ணயம் செய்தும் உரிய அரசின் அனுமதி ஆணையினை வழங்குமாறும், 2022-2023 ஆம் கல்வி ஆண்டிற்கு உற்பத்தி செலவினத்திற்கு முன்பணமாக ரூ.70,86,00,000/-ஐ, 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒப்பளிப்பு செய்து கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு பெற்றுத்தர உரிய ஆணை வழங்குமாறு தொடக்கக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(i) 2022-2023-ஆம் கல்வியாண்டில் சீருடைத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக நிர்வாக அனுமதி அளிக்கப்படுகிறது.

(ii) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை (ஈரோடு) பணியாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கவும், ஆலையின் செயல்பாட்டினை கருத்திற்கொண்டு மேற்படி ஆலையின் முழு பயனீட்டு திறன் போக பதனீடு செய்யவேண்டிய எஞ்சிய துணிகளை பதனீடு செய்வதற்கு, தமிழ்நாடு ஒளிவு

மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி ஒப்பந்தப்புள்ளி மூலம் பதனீட்டு ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்ய கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(iii) 2021-2022-ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவ / மாணவியர்களுக்கு 4 இணை சீருடைகள் வழங்குவதற்கான மொத்த உற்பத்தி செய்வதற்கான செலவினத் தொகை ரூ.327.44 கோடியில் ஒப்பளிப்பு செய்த தொகை ரூ.245.00 கோடி போக மீதமுள்ள ரூ.82.44 கோடியில் 2022-2023-ஆம் கல்வியாண்டில் 4 இணை சீருடைகள் வழங்கும் திட்டத்திற்காக முதன்மை செயலாக்க அனுமதியும், இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த முன்பணமாக ரூ.70.86 கோடி (ரூபாய் எழுபது கோடியே எண்பத்தாறு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து, அதனை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு பெற்றுத்தர தொடக்கக்கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மற்றும் தொடர்புடைய துறைகள் / அமைப்புகள் (Stake Holder Departments / Organization) முந்தய ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ள அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் வழிமுறைகளையே 2022-2023-ஆம் ஆண்டிற்கும் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்:-

(i) 2022-2023-ஆம் கல்வியாண்டில் சீருடைத் துணிகள் உற்பத்தி செய்வதற்கு 2021-2022-கல்வியாண்டில் வழங்கப்பட்ட 489.69 இலட்சம் மீட்டர் துணிகளை உத்தேச இலக்காக கொண்டு உற்பத்தி செய்யப்பட்டதில் இறுதி இருப்பாக எஞ்சியுள்ள துணிகளை 2022-2023-ஆம் கல்வியாண்டிற்கு வழங்க கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ii) சமூக நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மகளிர் தொழில்துறை கூட்டுறவு சங்கத்தின் மூலம் விலையில்லா சீருடைகள் தைத்து வழங்கப்பட வேண்டும்.

(iii) மாவட்டந்தோறும் உள்ள பள்ளிகளில் விலையில்லா சீருடைத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் (மாணவ / மாணவியர்கள்) குறித்த வகுப்பு வாரியான எண்ணிக்கையினை பெற்று சமூக நல

ஆணையருக்கு அனுப்புமாறு தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(iv) புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு மட்டும் நான்கு இணை சீருடைகள் வழங்கப்பட வேண்டும்.

(v) விலையில்லா சீருடைத் திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான உற்பத்தி, கொள்முதல், தர ஆய்வு போன்றவை தொடர்பாக முந்தைய ஆண்டுகளில் வெளியிடப்பட்டஅரசாணை மற்றும் தேவைப்பட்டியல் பெறுவது குறித்து வெளியிடப்பட்ட அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு துறைத் தலைமை / மாவட்ட ஆட்சியர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(vi) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் இத்திட்டத்தினை முழுவதும் செயல்படுத்த ஒப்படைப்பதுடன், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட ஆணையர் மூலம் மேற்கொள்ள ஏதுவாக சீருடைத் துணிகள் உற்பத்தி மேற்கொள்ள திட்டம் வகுத்து பலதரப்பட்ட கைத்தறி, விசைத்தறி கூட்டுறவு சங்கங்கள் (கைத்தறி உபயோகம்) விசைத்தறி (தானியங்கி தறி உட்பட) ஆகிய உறுப்பினர்கள் மூலம் அல்லது கூடுதலான கைத்தறி / விசைத்தறி (தானியங்கி தறி உட்பட) இவைகளை வாடகை மூலம் உபயோகிக்க உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(vii) அரசின் ஆணையினை எதிர்நோக்கி கைவசம் உள்ள எஞ்சிய மூலப் பொருட்களை கொண்டு சீருடை உற்பத்தியினை மேற்கொள்ள கூட்டுறவு சங்கங்களை அனுமதிக்க கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(viii) தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்கம் மற்றும் தமிழ்நாடு துணிநூல் கழகம் ஆகியவைகளுக்கு அதன் உற்பத்தி திறனை கணக்கில் கொண்டு இத்திட்டத்தினை செயல்படுத்த இப்பணியினை அவைகளுக்கு ஒப்படைக்க கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ix) 2021-2022 மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் துணிகள் உற்பத்தி செய்து வழங்கியது போக மீதத்தொகை இருப்பின், அசல் மற்றும் அதற்கான வட்டி தொகையினை சேர்த்து உரிய அரசு கணக்குத் தலைப்பில் மீள செலுத்தப்பட வேண்டும் எனவும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

மொத்த தொகை ரூ. 70,86,00,000/-

ரூ.52,43,64,000/-

2202 - பொதுக் கல்வி - 01 தொடக்கக் கல்வி - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - JC - மாணவ மாணவியருக்கு சீருடைகள் வழங்குதல் – 346 - உடைகள், கூடாரச் செலவுகள் பண்டகசாலைப் பொருள்கள் -01 உடைகள், கூடாரச்செலவுகள், பண்டக சாலைப் பொருள்கள்

(த.தொ.கு. 2202-01-800-JC-34601)

ரூ.14,88,06,000/-

2225-ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 01 - ஆதிதிராவிடர் நலன் - 789 - ஆதிதிராவிடருக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் - மாநிலச் செலவினங்கள்- JB - சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் மாணவ மாணவியருக்கு சீருடை வழங்குதல் – 346 - உடைகள், கூடாரச் செலவுகள் பண்டகசாலைப் பொருள்கள் - 01 உடைகள், கூடாரச் செலவுகள், பண்டக சாலைப்பொருள்கள்

(த.தொ.கு 2225-01-789-JB-34601)

ரூ.3,54,30,000/-

2202 - பொதுக்கல்வி – 01 - தொடக்கக் கல்வி - 796 பழங்குடியினர் பகுதித் துணை திட்டம் - மாநிலச் செலவினங்கள் - JB - மாணவ மாணவியருக்கு சீருடைகள் வழங்குதல் 346 - உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப் பொருட்கள் - 01 உடைகள், கூடாரச் செலவுகள், பண்டக சாலைப் பொருள்கள்

(த.தொ.கு 2202-01-796-JB-34601)

8. மேலே பத்தி-5-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககத்திற்கு வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், வழக்கமான நடை முறைக்குட்பட்டு கீழ்காணும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) பொது வைப்புக் கணக்கில் வைத்து செலவு மேற்கொள்ளுமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

"K – வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் –(b) – வட்டி ஈட்டாத வைப்பீடுகள் – 8443.00 – உரிமையியல் வைப்பீடுகள் – 800 ஏனைய

வைப்பீடுகள் -BN – கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்க வைப்பீடுகள் (கோ -ஆப்டெக்ஸ்)

(DPC 8443-00-800-BN-000E) (வரவுகள்)"

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 5497/கல்வி-II/2022, நாள்.07.02.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர்,சென்னை-108.
சமூக நல ஆணையர், சென்னை-32
மேலாண்மை இயக்குநர், கோ-ஆப்டெக்ஸ், சென்னை-8.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு),சென்னை-35.

நகல்

கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம)
கதர்த்துறை,சென்னை-9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சென்னை-9.
நிதி(கல்வி-II/வ.செ.பொது-I)துறை, சென்னை-9.
தமிழ்நாடு துணிநூல் கழகம், கோயம்புத்தூர்.
உள்ளுரை தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்